AstroVed

மாலை: 1

# சத்வித்யா

மலர்: 5

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்

அடுத்த மாதம் முதல் நமது சத்வித்யா இதழ் மாதம் 2 இரு முறையாக வெளிவரும்



## தீபத்திருவிழா

- நவம்பர் மாத ராசிபலன்கள்
- பெயர் எண்களின் சிறப்பு
- மந்திர மகிமை
- ஸ்ரீ சுப்பிரமணிய பஞ்ச ரத்னம்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 95004 95008, www.astroved.com


AstroVed

# சத்வித்யா



இலைகளில் இறைவன் இருக்கிறான் என்பதனை விஞ்ஞானபூர்வமாக நிரூபித்திருக்கிறார்கள். அவற்றில் முக்கியானது, துளசியும் வில்வமும் இந்த இரண்டு இலைகளும் பூஜைகளில் முக்கியத்துவம் வகிக்கும் தெய்வீகத்தன்மை கொண்டவை, இவற்றிலிருந்து வெளிப்படும் ஆற்றல் மனித எண்ணங்களை ஈர்க்கும் தன்மையை கொண்டது என்பதனை விஞ்ஞானக்கருவி ஒன்றின் மூலம் ஆய்வுசெய்து நிரூபித்திருக்கிறார்கள். துளசி இலைக்கு ஏகாதசி அன்றும் வில்வஇலைக்கு சிவராத்திரி அன்றும் அபரிமிதமான ஆற்றல் உண்டாகிறது என்பது ஆன்மிக விஷயம் மட்டுமல்ல, விஞ்ஞான உண்மையும் கூட .

~ Dr. Baskaran Pillai



நமது "சத்வித்யா" இதழின் நவம்பர் மாத இரண்டாவது இதழ் இது! கார்த்திகை மாதம் என்பது ஆன்மிகத்தில் குறிப்பிடத்தக்க சிறந்த மாதமாகும், கார்காலத்தின் துவக்கம் கார்த்திகை மாதம் என்றால் அது மிகையகாது, இந்த கார்த்திகையில் தான் பௌர்ணமியன்று இறைவன் ஈசன் திருவண்ணாமலை என்னும் சிறப்புமிகு தலத்தில் ஜோதி வடிவாய் காட்சி தருகிறார். இந்த வைபவம் திருவண்ணாமலையில் மட்டுமல்ல மலை உள்ள அனைத்து தலங்களிலும் மலை உச்சியில் தீபம் ஏற்றப்படுகிறது. புயலின் சீற்றத்தைத் தணிக்கும் வண்ணமே இப்படி தீபம் ஏற்றப்படுவதாய் விஞ்ஞான காரணம் சொல்லப்படுகிறது. இன்னும் பல இறை சிந்தனைகளோடு ஜோதிட, ஆன்மிக கருத்துகளை தொடர்ந்து நமது இதழ் மூலம் அறிந்துகொள்வோம். நேயர்கள் தங்கள் கருத்துகளை பதிவிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

அன்புடன்

(அச்சிட்டு வெளியிடுவோர்) ஆஸ்ட்ரோவேட்.காம்

# திருவாவினன் குடியா? பழனியா?



திருவாவினன் குடி; பழனி - என இரு பெயர்கள் சொல்லப்பட்டாலும், பெரும்பாலோர் இரண்டும் ஒன்று என்றே எண்ணுவோம். ஆனால் இரண்டும் வேறுவேறு.
திருவாவினன் குடி என்பது, மலை அடிவாரத்தில் உள்ள வையாபுரி ஏரிக்கரையில் அமைந்துள்ளது.

திரு - திருமகளான லட்சுமிதேவி; ஆ- காமதேனுளூ இனன்-சூரியன்; கு - பூமாதேவி; டி - அக்கினி பகவான். இவர்கள் அனைவரும் முருகப்பெருமானை வழிபட்ட திருத்தலம் இது. அதன் காரணமாகவே "திரு-ஆ-இனன்-கு-டி" என்பது, திருவாவினன்குடி என அழைக்கப்படுகிறது.

அகத்தியர் சொற்படி சூரபத்மனின் குருவான இடும்பனால் கொண்டுவரப் பட்ட சக்தி கிரி - சிவ கிரி எனும் இருமலைகளில், பழனிமலை "சிவகிரி" எனவும்; சக்திகிரி "இடும்பன் மலை" என்றும் அழைக்கப் படுகிறது.

சிவகிரியான பழனி மலையை, "அதிசயம் அனேகம் உற்ற பழனிமலை" என அருணகிரிநாதர் துதிக்கிறார். ஆம்! இதிஹாச புராண காலங்களில் மட்டுமல்லாமல், நம் காலத்திலும் முருகப்பெருமான் பல அதிசயங்களைப் பழனி மலையில் நிகழ்த்தியுள்ளார்.

அடுத்தது - பழனிமலையைப் பற்றிய மற்றோர் உண்மைதகவல் பழத்துக்காக - மாம்பழத்துக்காக முருகப்பெருமான் வந்து நின்ற இடமே "பழம் நீ "; அதாவது பழனி எனக்கேள்விப்பட்டிருக்கிறோம். பாலதண்டாயுதபாணி பழத்துக்காக வந்து நின்றதால் பழ(ம் நீ)னி எனப் பெயர் பெற்றது உண்மைதான். ஆனால் மாம்பழத்துக்காக அல்ல! மாதுளம் பழத்திற்காக!

விநாயகருக்கு உண்டான பூஜா மந்திரங்களில் "பீஜ பூர பலம்"- மாதுளம்பழம் என்றுதான் உள்ளது. "சிவஞான" எனும் பொதுத் திருப்புகழில் "ஔரானையின் கரமில் மகிழ் "மாதுளங்கனி"யை ஒருநாள் பகிர்ந்த உமை அருள் பாலா" என அருணகிரிநாதரும் "மாதுளம்பழம்" என்றுதான் கூறுகிறார்.

பழனியாண்டவன் படத்தை வீட்டில் வைக்கக்கூடாது; குடும்பம் மொட்டையாகி விடும் - என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கலாம். இதுவும் எந்தவிதமான அடிப்படையும் இல்லாத தகவல்தான். பழனியாண்டவன் "மொழுமொழு" என்று மொட்டையடித்த வடிவில் இல்லை. பழனியாண்ட வன் படத்தை மொழுமொழு"வென்று மொட்டையாக வைத்திருந்தால், அதற்குப் பழனியாண்டவனா பொறுப்பு? பழனியாண்டவன் மொட்டை கோலத்தில் இல்லை. அழகான கேச பாரங்கள் உண்டு; "ஒண்மீக் குடுமியழகும்" எனத் தெளிவாகக் கூறுகிறது தலபுராணம்.

ஆகையால் சஷ்டித்திருநாளில் "சுக்குக்கு மிஞ்சிய மருத்துவமில்லைளூ சுப்ரமணியனுக்கு மிஞ்சிய தெய்வம் இல்லை" எனும் பழமொழியை அனுசரித்துளூ போகர், அருண கிரிநாதர், வள்ளிமலை சுவாமிகள் முதலான மகான்கள் பலரும் வழிபட்ட பழனியாண்டவனை மனதார வழிபடுவோம்! வாட்டும் துன்பங்கள் எல்லாம் விடைபெறும்!

~ சொல்லில் செல்வன் PN பரசுராமன்

# ஸ்ரீ சுப்பிரமணிய பஞ்ச ரத்னம்



ஸ்ரீதர ஐயாவாள் எனும் மஹானால் அருளப்பட்ட இத்துதி வியாபாரத்தில் வெற்றி, கல்வி, ஆரோக்கியம், மகப்பேறு, ஐஸ்வர்யம், வேலை முதலானசகல செல்வங்களையும் அருள்கூடியது; அபூர்வமானது.

ச்ருதி சதநுத ரத்னம் சுத்த ஸத்வைக ரத்னம்
யதிஹித கர ரத்னம் யக்ஞ சம்பாவ்ய ரத்னம்
திதி சுத ரிபு ரத்னம் தேவ ஸேனேச ரத்னம்
ஜிதரதி பதி ரத்னம் சிந்தயேத் ஸ்கந்த ரத்னம்

**கருத்து:** நூற்றுக்கணக்கான வேதங்களால் துதிக்கப்பட்ட, ரத்தினம் போலச் சிறப்பு வாய்ந்தவர்; தூய்மையான சத்துவ குணரத்தினம்; துறவிகளுக்கு நன்மையைச் செய்யும் ரத்தினம்; யாகத்தில் துதிக்கப்படும் ரத்தினம்; தீயோர்களை அழிக்கும் ரத்தினம்; தெய்வானையின் கணவரான ரத்தினம்; மன்மதனை வென்ற அழகுவாய்ந்த ரத்தினம்; இப்படிப்பட்ட ஸ்ரீ ஸ்கந்தனான ரத்தினத்தைத் தியானம் செய்!

ஸுரமுக பதி ரத்னம் ஸூக்ஷ்ம போதைக ரத்னம்
பரமசுகத ரத்னம் பார்வதீ ஸூனு ரத்னம்
சரவணபவ ரத்னம் சத்ரு சம்ஹார ரத்னம்
ஸ்மரஹர ஸுத ரத்னம் சிந்தயேத் ஸ்கந்த ரத்னம்

**கருத்து:** தேவர்கள் படைக்குத் தலைவரான ரத்தினம்; நுணுக்க மான ஞான வடிவான ரத்தினம்; உயர்ந்த இன்பத்தை அருளும் ரத்தினம்; பார்வதியின் மைந்தனான ரத்தினம்; சரவணத்தில் தோன்றிய ரத்தினம்; பகைவர்களை அழிக்கும் ரத்தினம்; மன்மதனைச் சாம்பலாக்கிய ஸ்ரீ பரமசிவனின் மைந்தனான ரத்தி னம்; இப்படிப்பட்ட ஸ்ரீ ஸ்கந்தனான ரத்தினத்தைத் தியானம் செய்!

நிதிபதி ஹித ரத்னம் நிச்சிதாத்வைத ரத்னம்
மதுர சரித ரத்னம் மாநிதாங்க்ரி அப்ஜ ரத்னம்
விது சதநிப ரத்னம் விச்வ ஸந்த்ராண ரத்னம்
புத முனி குரு ரத்னம் சிந்தயேத் ஸ்கந்த ரத்னம்

**கருத்து:** குபேரனுக்கு அருள் புரியும் ரத்தினம்; அனைத்தும் ஒன்றாகவே விளங்கும் ரத்தினம்; இனிமையான வரலாறு கொண்ட ரத்தினம்; வழிபடப்படும் திருவடித் தாமரைகளை உடைய ரத்தினம்; நூற்றுக் கணக்கான சந்திரன்களுக்கு இணை
யான ஒளிவீசும் ரத்தினம்; நன்றாக உலகைப் பரிபாலிக்கும் ரத்தினம்; தேவ முனிவரான நாரதருக்குக் குருவான ரத்தினம்; இப்படிப்பட்ட ஸ்ரீ ஸ்கந்தனான ரத்தினத்தைத் தியானம் செய்!

அபய வரத ரத்னம் சாப்த ஸந்தான ரத்னம்
இப முகயுத ரத்னம் ஈச சக்த்யைக ரத்னம்
சுபகர முக ரத்னம் சூர ஸம்ஹார ரத்னம்
உபய கதித ரத்னம் சிந்தயேத் ஸ்கந்த ரத்னம்

**கருத்து:** அபயம் அருளி, வரங்களையும் அருளும் ரத்தினம்ளூ புத்திர பாக்கியத்தை அருளும் ரத்தினம்; யானை முகம்கொண்ட விநாயகப்பெருமானுடன் இருக்கும் ரத்தினம்; ஸ்ரீ பரமேஸ்வரனின் சக்தியான ரத்தினம்; மங்கலங்களை அளிக்கக்கூடிய திருக்கரங்கள்-திருமுகங்கள் ஆகியவை கொண்ட ரத்தினம்; சூரபத்மனை சம்ஹாரம் செய்த ரத்தினம்; இம்மையிலும் மறுமையிலும் நன்மையை அருளும் ரத்தினம்; இப்படிப்பட்ட ஸ்ரீ ஸ்கந்தனான ரத்தினத்தைத் தியானம் செய்!

ஸுஜன ஸுலப ரத்னம் ஸ்வர்ண வல்லீச ரத்னம்
பஜன ஸுகத ரத்னம் பானு கோட்யாப ரத்னம்
அஜ சிவகுரு ரத்னம் சாத்புதாகார ரத்னம்
த்விஜ கணநுத ரத்னம் சிந்தயேத் ஸ்கந்த ரத்னம்

**கருத்து:** நல்லவர்களுக்கு எளிமையான ரத்தினம்; பொன்போன்ற வள்ளியின் மணவாளனான ரத்தினம்; தூய்மையான பக்தியுடன் துதிக்கும் அடியார்களுக்கு இன்பம் அருளும் ரத்தினம்; கோடி சூரியன்களுக்குச் சமமான ஒளி உள்ள ரத்தினம்; பிரம்மதேவருக்கும் ஸ்ரீ பரமேச்வரனுக்கும் குருவான ரத்தினம்; ஆச்சரி யமான வடிவம் கொண்ட ரத்தினம்ளூ வேத வல்லுனர்களின் கூட்டங்களால் துதிக்கப்பட்ட ரத்தினம்; இப்படிப்பட்ட ஸ்ரீ ஸ்கந்தனான ரத்தினத்தைத் தியானம் செய்!

ஷண்முகஸ்ய ஸகலார்த்த ஸித்திதம்
பஞ்ச ரத்னமக ப்ருந்த க்ருந்தனம்
யே படந்தி விபவை : ஸ்புடான் விதா:
ஸ்ரீதராக்ய குருமூர்த்யநுக்ரஹாத்

**கருத்து:** பாவக் கூட்டங்களை நீக்குபவர்ளூ விரும்பும் அனைத்தையும் நிறைவேற்றி, ஸித்தியும் அளிக்கும் ஆறுமுகப்பெருமானின் இந்தப் "பஞ்ச ரத்தின"த் துதியைப் படிப்பவர்கள், திருவிச நல்லூரில் ஜோதிமயமாக விளங்கும் ஸ்ரீதர ஐயாவாள் எனும் குருமூர்த்தியின் அருளால்,சகல செல்வங்களும் பெற்று விளங்குவார்கள்.




KABA SURA KUDINEER
15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties
Call: 95004 95008

# தீபத்திருவிழா

### 29 - 11 - 2020 "கார்த்திகை தீபம்"

### பரணி தீபமும் - கார்த்திகை தீபமும்

"தொல் கார்த்திகை நாள்...விளக்கீடு" என்பது திருஞானசம்பந்தர் வாக்கு. இதன்படி கார்த்திகை தீபத் திருவிழா மிகவும் பழைமையானது என்பது விளங்கும். கார்த்திகை தீபம் என்றால், அனைவர் நினைவிலும் உதிப்பது திருவண்ணாமலையும் அங்கு ஏற்றப்படும் கார்த்திகை தீபமும் தான். அப்படிப்பட்ட கார்த்திகை தீபத்தின் உட்பொருளை உணரலாம்ளூ வாருங்கள்! ஆதியும் அந்தமும் இல்லாதது அருள் பெருஞ்ஜோதி - பரம்பொருள். ஒன்றேயான அப்பரம்பொருள் உயிர்களுக்கு, உடம்பு - பொறி புலன்கள் உலகம்- சுகங்கள் ஆகியவற்றைக்கொடுத்து, நாம் தூய்மைபெற்று முக்தியடைய வேண்டும் என்பதற்காகப் படைத்தல், காத்தல், ஒடுக்கல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில் (பஞ்ச கிருத்தியங்) களையும் செய்யத் தீர்மானித்தது. ஒரு பெயர் ஓர் உருவம் இல்லாத பரம்பொருள் - ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என ஐந்து விதமான பெயர்களுடன் வடிவம் கொண்டு பஞ்சமூர்த்தி ஆனது.(ஆகமங்கள் சொல்லும் தகவல் இது).

ஒரே பரம்பொருள் இவ்வாறு ஐந்து வடிவங்களாக ஆனதை விளக்குவதே, தீபத்திருநாள் அன்று காலையில் கருவறையில் ஏற்றப்படும் பரணிதீபம் என்பது.ஒரு பெரும் கற்பூரக்கட்டியில் ஜோதிச்சுடரை ஏற்றி, அருணாசலேசுவர் முன் தீபாராதனை நடக்கும். இவ்வாறு ஒற்றைச்சுடரைக்காட்டுவது, பரம்பொருள் ஒன்றே ஒன்று தான் என்பதை விளக்கும்.இதன்பிறகு அக்கற்பூர ஜோதி,பெரும் அகல் மடக் கில் இருக்கும் ஒரு நெய்த்திரியில் ஏற்றப்படும்.



ஒரு பரஞ்சுடரே ஐந்தொழில்களைச் செய்வதற்காக ஐந்து வடிவங்களாக(பஞ்ச மூர்த்திகளாக) ஆவதை உணர்த்துவதற்காக, அந்த ஒரு சுடரிலிருந்து ஐந்து பெரும் அகல் விளக்குகள் நந்திதேவர் முன் ஏற்றப்படும்.

அதன்பின் அந்தப் பஞ்ச (5) மூர்த்திகளும் பஞ்ச (5) சக்திகளும் சேர்ந்து செயல்படுவதை உணர்த்துவதற்காக, பெரும் அகல் மடக்கில் உள்ள ஜோதியை வலமாக எடுத்துப்போய், அம்மன் சன்னதி கருவறையில் ஐந்து அகல் விளக்குகளை ஏற்றுவார்கள். இதன்பின் அந்த சிவ-சக்தி வடிவங்களிலிருந்து விரிவடைபவை தாம் அனைத்து மூர்த்தங்களும் என்பதை உணர்த்துவதற்காக, விநாயகர் சன்னதி முதலான அனைத்து சன்னதிகளிலும் தீபங்கள் ஏற்றப்படும். பரணி தீபத்தின் உட்பொருள் இதுவே.

- மாலையில் கார்த்திகை தீபம் -

மாலையில்... ஒன்றேயான பரம்பொருளே, பஞ்ச (5) வடிவங்களாக விளங்குகின்றது என்பதை உணர்த்துவதற் காகக் காலையில் ஏற்றப்பட்ட ஐந்து அகல் விளக்குகளையும்; அம்பாள் சன்னதியில்

ஏற்றப்பட்ட ஐந்து அகல் விளக்குகளையும் கொண்டு வருவார்கள், அப்போது அர்த்த நாரீஸ்வரரும் உடன் வருவார்; வந்து, கொடி மரத்தின் முன் இருக்கும் பெரும் அகண்டத்தில் ஜோதிகள் அனைத்தையும் ஒன் றாகச் சேர்ப்பார்கள்.

அதாவது ஒன்றேயான பரம்பொருளில் இருந்து உண்டான வடிவங்கள் எல்லாம், மீண்டும் அப்பரம்பொருளிலே யே ஒடுங்கும் என்பதை உணர்த்துவதே இந்த வைபவம்.

அவ்வாறு ஒன்று சேர்க்கும் அதே வேளையில் மலை உச்சியில், பெரும் ஜோதி ஏற்றப்படும்ளூ "அண்ணாமலையாருக்கு அரோகரா! அரோகரா!" என அடியார்கள் பேரொலி எழுப்புவார்கள்.

சிவ-சக்தி வடிவங்களை உணர்த்தும் அகல் விளக்குகள் கொடி மரத்தின் முன் உள்ள அகண்டத்தில் ஒன்றாகச்சேர்க்கப்படும் போது, அர்த்த நாரீஸ்வரர் அங்கு வருவதாகப்பார்த்தோம் அல்லவா? அதன் உட்பொருள்....

அம்பிகை உமாதேவி திருவண்ணாமலைக்கு வந்து, தவம்செய்து இடப்பாகம் பெற்றார். அதன் காரணமாக சிவ மும் சக்தியும் இணைந்த அர்த்த நாரீஸ்வர வடிவம் தோன்றியது; அர்த்தநாரீஸ்வர வடிவம் தோன்றிய நாள்...

கார்த்திகை மாதம் - கிருத்திகை நாளில்! சிவ ஜோதியும் சக்தி ஜோதியும் அகண்டத்தில் ஒன்றாகச் சேரக்கப்படும் போது, அங்கே அர்த்த நாரீஸ்வரர் வருவார்; அந்த அர்த்த நாரீஸ்வர வடிவம் வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே வெளியில் வரும்; வந்தாலும் திருவீதி உலா வராது; கொடிமரத்தின் அருகில் வந்து தரிசனம் தந்து, பிறகு மறுபடியும் உள்ளே சென்று விடும்.

பரணி தீப - கார்த்திகை தீபத்தின் உட்பொருள் இதுவே.

இப்படிப்பட்ட தீப ஜோதியைத் தரிசித்தவர்க்கு, 21- தலை முறைக்கு முக்தி அருள்வதாக வரமளிக்கின்றார் அண்ணாமலை ஆண்டவன் - என்பது அருணாசல புராண வாக்கு.



~ சொல்லில் செல்வன் PN பரசுராமன்

## அரிய ஆன்மிக தகவல்

# 48 ஆண்டுகளாக வாடாத மலர்மாலை.

நான்மாடக்கூடலாம் மதுரை மாநகரின் மையத்தில் கோயில்கொண்டு அருள்புரியும் அன்னை மீனாட்சியின் ஆலயத்தில் நடைபெற்ற அதிசயம் இது!

சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னால், இன்றுபோல் மக்கள் பக்திமயமாக மீனாட்சி அம்மனையும் சொக்கநாத பெருமானையும் வணங்கி வந்தனர். அப்போது இஸ்லாமியத் தளபதியான மாலிக்காப்பூர் தென்னிந்திய கோவில்களில் மீது தனது படைபலத்தை ஏவிவிட்டு கோவில் உள்ள பொக்கிஷங்களைக் கொள்ளையடித்தும் சிலைகளை சேதப்படுத்தியும் வந்தான்.

ஒரு இக்கட்டான நேரத்தில் மதுரையம் பதியைத் தாக்க திட்டமிட்டு அந்தப்படைகள் வருவதை அறிந்த குறுநில மன்னன், மாலிக்காப்பூரின் படைவலிமைக்கு அஞ்சி, நாட்டை விட்டே வெளியேறினான்.



எப்படியாவது இந்த ஆலய இறைவனை பாதுகாக்கவேண்டும் என எண்ணிய கோயில் ஸ்தானிகர்கள் சொக்கநாதப் பெருமானின் கருவறையை மணல்மேடு கொண்டு மூடி, கருவறையை மறைத்தனர், அர்த்த மண்டபத்தில் வேறொரு சிவலிங்கத்தை ஸ்தாபிதம் செய்து விட்டு சென்றனர்.

முகலாயப்படைகள் திட்டமிட்டு வந்தன. தற்காலிகமாய் நிறுவிய சிவலிங்கத்தைப் பெயர்த்து அடியில் பொக்கிஷம் உள்ளதா என தேடினர். ஏதும் இல்லாததால் ஆத்திரமடைந்த படையினர் அந்த சிவலிங்கத்தை உடைத்து சேதப்படுத்திவிட்டு சென்றனர்.

உண்மையான சிவலிங்கம் கருவறையில் பத்திரமாக இருந்தது. ஸ்தானிகர்கள் கருவறையை மூடிய போது சிவலிங்கத்துக்கு சந்தனக் காப்பிட்டு மலர்மாலைகள் சூட்டி, விளக்குகளை ஏற்றி வைத்துவிட்டே கருவறையை மூடினர்.

இது நடந்து 48 ஆண்டுகள் கழித்து, அன்னியப்படையெடுப்பை முறியடித்தனர் கம்பண்ணர் என்ற குறுநில மன்னன். மூலர் தெரிவித்த தகவலின்படி கருவறையை மூடியிருந்த மணல் மேட்டை அகற்றி உள்ளே பார்த்த கம்பண்ணதின் கண்கள் ஆச்சர்யத்தால் விரிந்தன.

காரணம், 48 ஆண்டுகளுக்கு முன்னால், கருவறையை மூடியபோது பூசிய சந்தனம் மணம் வீசியது மலர் மாலைகள் வாடவில்லை விளக்குகள் அணையவில்லை இன்று பூஜை செய்தது போலவே இருந்தது இதைத்தான் கம்பண்ணர் கண்டகாட்சி என்று வரலாறு போற்றுகிறது உடைக்கப்பட்ட சிவலிங்கமும் இது பற்றிய தகவலும் சுவாமி கருவறையின் வெளிப்பிரகாரத்தில் இன்றும் உள்ளதைக்காணலாம்.

# கடலூரில் "பெரிய கோயில்"



கடலூர் மாவட்டத்தில் மிகவும் பழமை வாய்ந்த சிவாலயங்கள் எழுந்தருளிய பகுதியை நடுநாடு என்பர். அந்த நடுநாட்டில் அமைந்துள்ள 22 சிவத்தலங்களுக்குள் மிக முக்கியமான 18வது சிவத்தலம் பாடலீசுவர்

கோயில் ஆகும். இது கடலூரில் அமைந்துள்ளது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், அருணகிரிநாதர் போன்றோரால் பாடல்பெற்ற தலம் என்பதால் இங்குள்ள இறைவன் பாடலீசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

இத்தல இறைவி தோகை நாயகி, பெரிய நாயகி என அழைக்கப்படுகிறார்.

கன்னிவளநாதன், கடை ஞாழலுடைய பெருமானடிகள், சிவக்கொழுந்தீசன். பாடலநாதன், கரையேற்றும் பிரான் எனும் வேறு திருப்பெயர்களும் இத்தல இறைவனுக்கு அமைந்துள்ளன.

ஊர், கடைஞாழலூர், கன்னிவனம், கன்னிகாப்பு, பாடலபுரம், ஆதிமாநகர், உத்தாரபுரம், பாதிரிப்பதி, திருப்பாதிரிப்புலியூர், புலிசை என பலப் பெயர்கள் இந்த ஊருக்கு வழங்கப்படுகிறது, இதில் கடைஞாழலூர் என்பதே கடலூர் என ஆனதாகவும் கூறுகிறார்கள், 63நாயன்மார்களுக்கும் திருவுருவச்சிலைகள் இங்கு அமைந்துள்ளன. தட்சணாமூர்த்தி, பிள்ளையார், முருகர், துர்க்கை போன்ற கடவுள்களும் சந்நிதி கொண்டு எழுந்தருளியுள்ளனர்.

பெரியநாயகியின் சந்நிதி தனியாக உள்ளது. அம்பிகையின் எதிரில் நந்தி சிலை அமைந்துள்ளது மிகவும் விசேஷமாகும்.

# பாதிரி மரம்



இக்கோயிலின் தலவிருட்சம் பாதிரி மரமாகும். இது பன்னிரு வகையான பூக்களை ஒரே காலத்தில் பூத்ததாக புராணங்கள் கூறுகின்றன.

இம்மரங்களை பட்டதால் முடங்கு கால் முயல் உருவாக சாபம் பெற்றிருந்த மங்கண முனிவரும், உபமந்தியரும் சாப நீக்கம் பெற்றனர் என்பது புராணச்செய்தி.

ஒரு சமயம் சிவபெருமானின் அருள்விழிகளை தம் திருக்கரங்களால் மூட, சிவனின் சாபத்திற்கு ஆளானாள் அம்பிகை. அவள் இறைவனிடம் சாப விமோசனம் வேண்ட, "நீ பூவுலகத்தில் நாம் எழுந்தருளியல்ல 1008 சிவத்தலங்களையும் தரிசித்து கொண்டு வருங்காலத்தில் எந்த தலத்தில் உன் இடத்தோளும், இடக்கண்ணும் துடிக்கின்றனவோ அத்தலத்தில் தங்கி தவம் மேற்கொண்டால் யாம் அங்கு வந்து உன்னை திருமணம் புரிந்து கொள்வோம்" என்றருளினார்.




உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும்

சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்

www.priestservices.com போன்: 95004 95008

# யாக்ஞவல்கியர்

நவம்பர் 26 - ஸ்ரீ யாக்ஞவல்கிய ஜயந்தி யோகிகளிலேயே ஈஸ்வரப் பட்டம் பெற்றவர் ஒருவர்தான். அவரே "யோகீஸ்வர யாக்ஞவல்கியர்".

"யாமே வந்து உமக்குப் புத்திரராக அவதரிப்போம்" என பிரம்மராதருக்கு மஹாவிஷ்ணு வரமளித்து, அதன்படியே நிகழ்ந்த அவதாரம் "யாக்ஞவல்கியர்" அவதாரம்.



தெய்வ அவதாரமாகவே இருந்தபோதும் உலகியலை அனுசரித்துக் கண்ணன் சாந்தீபனி முனிவரிடம் சீடனாக இருந்ததைப்போல, யாக்ஞவல்கியரும் வைசம்பாயனர் என்பவரிடம் சீடனாக இருந்தார்.

ஒரு சமயம்...சீடனிடம் கோபம் கொண்ட வைசம்பாய னர், "நீ என்னிடம் கற்ற வேதங்களையெல்லாம் கொடுத்து விட்டுப் போ" என்றார். தெய்வ அவதாரமான யாக்ஞவல்கியர் யோசிக்கவே இல்லை; வைசம்பாயனரிடம் தான் கற்ற வேதத்தை அப்படியே கக்கி விட்டார்.

யாக்ஞவல்கியரால் கக்கப்பட்ட வேதம், அக்கினி போல் ஜொலிக்க, அதைக்குருவின் உத்தரவால் மற்ற சீடர்கள் "தித்திரி" பறவைகளாக மாறி உட்கொண்டார்கள். அதுவே "தைத்திரீயம்" எனும் வேதப்பகுதி.

இதன்பிறகு யாக்ஞவல்கியர் காயத்ரி தேவியின் அருளால் சூரியபகவானைத் தரிசித்து, "சூரியபகவானே வைசம் பாயனர் அறியாத வேதத்தை எனக்கு உபதேசம்செய்தருள வேண்டும்" என வேண்டினார்.

சூரியபகவான் அருள் புரியத் தொடங்கினார். அதே விநாடியில் யாக்ஞவல்கியரின் உடல் முழுதும் கொதிப்பு ஏறத் தொடங்கியது. அவர் வருந்தினார்.அதைக்கண்ட சூரியபகவான், "உத்தமா!இதோ இந்தத் தடாகத்திலே நீராடு இதற்குள் சௌர(சூரிய)மந்திரங்கள் நிலைபெற்று உள்ளன" எனக்கூறி வழி காட்டினார்.

அதன்படியே யாக்ஞவல்கியர் நீராடித் தடாகத்தை விட்டுக் கரையேறினார்ளூ உடல் கொதிப்பு நீங்கியது; மனம் தெளிவுற்ற யாக்ஞவல்கியருக்கு உள்ளத்தில் சௌர சூக்தங்கள் தோன்றின. தான் கரையேறிய தடாகத்தின் கரையில் பன்னிரண்டு (துவாதச) ஆதித்த வடிவங்களைப் பிரதிஷ்டை செய்தார், அவற்றின் முன்னால் நின்று, தன் மனத்தில் உதித்த சௌர சூக்தங்களைச் சொல்லித் துதித்தார். மகரிஷிகள் பலரும் அங்கு வந்து, அபூர்வமான அந்த சூக்தங்களைக்கேட்டு வியந்தார்கள்.

யாக்ஞவல்கியரோ சூரியபகவானிடம், "பிரத்தியட்ச தெய்வமே! அடியேன் சொன்ன இந்த சூக்தங்களைச்சொல்லி உங்களைத் துதிப்பவர்களுக்கு, எல்லாவிதமான மங்கலங்களையும் அருள வேண்டும்! என வேண்டினார்.

அதன் பின் சூரியபகவான் யாக்ஞவல்கியருக்கு, அவர் விரும்பியபடி வேதங்களை உபதேசித்தார். யாக்ஞவல்கியர் படத்தைப் பார்த்தால், அதில் சூரியபகவானும் இடம் பெற்றி ருப்பதைக் காணலாம். யாக்ஞவல்கியரைப் பக்தியுடன் வழிபட்டால், விரும்பி அடையமுடியாமல் போன கடினமான வித்தை-கல்வியும் கிடைக்கும்.

~ சொல்லில் செல்வன் PN பரசுராமன்

# மந்திர மகிமை

ஆதிசங்கரர் அருளிய "சௌந்தர்ய லஹரியில்" உள்ள 100பாடல்களும் 100காரியசித்தி மந்திரங்களாக பலப்படுத்தும் ஆற்றல் கொண்டவை, இதில் உள்ள முதல் 41பாடல்கள் ஸ்ரீ சக்கர தியான முறையையும் மீதமுள்ள 59 ஸ்லோகங்களும் அம்பிகையின் அழகை உச்சி முதல் உள்ளங்கால் வரை வர்ணிக்கும் விதமாக அமைந்துள்ளது. இதில் உள்ள பாடல்கள் (ஸ்லோகங்கள்) அனைத்தும் மந்திரங்களே!

இந்த மந்திர மகிமை பகுதியில் அம்பிகையின் உருவ அழகை சிலாகித்தவாறே, அந்த மந்திரங்களின் மகிமை பற்றியும் அவற்றைப் பிரயோகிக்கும் முறைகளையும் காண்போம்.

துன்பம் நீங்கும் மந்திரங்களில் முதலில் நாம் "பஞ்சம் நீங்கி வளம்பெற" உதவும் மந்திரத்தைப் பாப்போம்.

## மந்திரம்

ஷிதௌ ஷட்பஞ்சாசத் த்விலைமதிக பஞ்சாச துதகே ஹீதாசே திவாஷஷ்டிச் சதுரதிக பஞ்சா தகிலே திவி ஷட் ரிம்சன் மனச சதுஷ்ஷஷ்டி ரிதி யே மயூகால் தேஷா மத்யுரி தவ பாதாம்புஜ யுகம்.

இதன் பொருள் என்ன வென்றால் பஞ்சபூத தத்துவத்தில் எவ்வளவு ஒளிக்கதிர்கள் உண்டோ அவற்றுக் கெல்லாம் மேலாக நினது திருவடிகள் விளங்குகின்றன, தாயே! இந்த மந்திரத்தை பிரயோகம் செய்யும் முறை பற்றுப் பார்க்கும்போது. இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை தங்கத் தகட்டில் வரைந்து பூஜையில் வைக்க வேண்டும்.

சாதம், உளுந்துவடை, பால் பாயசம், ஏலம், கிராம்பு, பச்சைக்கற்பூரம், ஜாதிக்காய், ஜாதி பத்திரி ஆகியவை சேர்ந்த  கர்ப்பூர வீடிகா என்கிற தாம்பூலத்தை நைவேத்யம் செய்து, 45 நாட்கள் வடக்கு நோக்கி அமர்ந்து தினமும் 1008 முறை பாராயணம் செய்ய வேண்டும்.

இப்படி செய்வதனால் நம் வீட்டின் பஞ்சம் நீங்குவதோடு நாட்டின் பஞ்சமும் வறட்சியும் நீங்கும். தனிமனிதர் தன் பஞ்சம் நீங்கி, வளம் பெற இந்த மந்திரத்தை பாராயணம் செய்யலாம். எந்த இடையூறும் செய்ததில்லையாம் பாம்பும்கீரியும் ஓரிடத்தில் ஒன்றாய் உறைவது இறையருள் என்றே அனைவரும் மெய்சிலிர்க்கின்றனர்.

இங்குவரும் கீரிகளுக்கும் படைப்பதற்கென்றே பக்தர்கள் பண்டங்களை வாங்கி வருகின்றனர். பூஜையின் போது, குகை முழுவதும் அகல் விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தாலும் மாட முகப்பில் எரிகின்ற ஒரு விளக்கின் ஜோதி அசைந்தாட, அதுவே கீரிகள் வரும் அறிகுறி என்று அறிந்து அனைவரும் வணங்குகின்றனர்.

இந்த குகையில் பூஜை செய்து, சிவனை வணங்கி, தியானம் செய்கின்றனர். இதன் மூலம் மனநிம்மதியோடு சகல சௌக்கியங்களையும் பெறுகின்றனர்.

தினமும் உச்சிகால பூஜை வேலையில் கீரிகள் வருகின்றன. மாதாமாதம் பௌர்ணமியால் இரவு முழுவதும் பக்தர்கள் தங்கி பூஜைகள் செய்து இறையருளும் இன்பமும் நிம்மதியும் பெற்றுச் செல்கின்றனர்.

~ பன்னீர்செல்வம்

# குரு யந்திரம்



## ஓம் ஷ்ரம் ஷ்ரீம் ஷ்ரௌம் ஸஹ் குரவே நமஹ்

குரு பகவான் ஒரு ஜாதகத்தில் வலுவாக இருந்தால் அவன் பிரபஞ்சத்தை ஆழத் தகுதியானவன். பொன்னன் என்கின்ற எந்த குருபகவான் தனகாரகன், புத்திரகாரகன் என போற்றப்படுகிறார். இந்த குரு பகவான் வலுப்பெற அவருடைய மூலமந்திரத்தை ஜெபிப்பதன் மூலமாகவும் இந்த குரு பகவானின் உடைய எந்திரத்தை வீட்டில் வைத்து பூஜை செய்வதன் மூலமாகவும் குருவினுடைய திருவருளை பெறமுடியும். குரு ஸ்தலமான ஆலங்குடி மற்றும் திருச்செந்தூர் முருகனை மனதில் நினைத்து இந்த குரு பகவானுடைய மூல மந்திரத்தை குரு ஹோரையில் வைத்து துதிப்பவர்கள் வாழ்வில் பல நன்மையான மாற்றங்கள் ஏற்படும்.

மேலே உள்ள குரு மூல மந்திரத்தை வியாழக்கிழமைதோறும் அதிகாலையில் எழுந்து குளித்து 108 முறை குரு எந்திரத்தின் முன் உருவேற்றும் பொழுது குருவினுடைய பரிபூரண அனுக்கிரகம் கிடைக்கும். ராசிக்கட்டத்தில் ஒவ்வொரு ராசியிலும் ஒரு வருட காலம் சஞ்சாரம் செய்யும் கிரகமான குரு இந்த வருடம் நவம்பர் மாதம் முதல் வரும் வருடம் நவம்பர் மாதம் வரை பத்தாமிடத்தில் மகரத்தில் சனி பகவானுடன் இணைந்து காணப்படுகிறார்.

இந்த பொன்னான நேரத்தில் தர்மகர்மாதிபதி யோகத்தை அருள்வார். தர்ம கர்மாதிபதி யோகம் ஒருவருடைய வாழ்வில் அனைத்து விதமான மாற்றங்களையும் கொடுத்து அவர்களுடைய குடும்பத்திலும் சந்தோஷத்தை தரும். திருமணம் ஆகாதவர்கள் குரு எந்திரத்தை வைத்து பூஜை செய்வதன் மூலமாக நல்ல மணமகன் மணமகள் கிடைக்கப் பெறுவார்கள். புத்திரப்பேறு இல்லாதவர்கள் குரு எந்திரத்தை வைத்து பூஜை செய்வதன் மூலமாகவும் சுவாதி நட்சத்திரத்தில் நான்காம் பாதத்தில் இவர்கள் இணைவதன் மூலமாகவும் நல்ல அழகான குழந்தை பிறக்கும். ஒவ்வொருவர் வாழ்விலும் தனம் மிகவும் முக்கியம் தன காரகனாகிய குரு பகவானுடைய அருள் கிடைத்தால் செல்வம் குவியும். எல்லோரும் குரு அருளுடன் நலம்பெற ASTROVED - ன் வாழ்த்துக்கள்.

மோஹத்வஸ்த்யை வைணிகவையாஸகி
முக்யா:
ஸம்வின்முத்ரா புஸ்தக வீணாக்ஷகுணான்யம்
ஹஸ்தாம்போஜைர்பிப்ரத மாராதிதவந்த:
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி

~ ஜோதிடர் ஜெயம் ஜனார்தனன்

# எண்கணிதம் சில விளக்கங்கள்



எண் கணிதத்தைப் பொறுத்தவரையில் ஒருவரது வாழ்க்கையில் 30சதவிகித பலன்களை மட்டுமே தரும் எனவும் அதிலும் அதிர்ஷட எண்களை சரியாக தேர்ந்தெடுத்து வைப்பதால் மட்டுமே உயரிய பலன்களைப் பெறமுடியும் என்பதையும் சில சிறப்பான பெயர் எண்களைப் பற்றியும் கடந்த இதழ்களில் பார்த்தோம்.

பொதுவாக, இன்றும் பலர் சாதாரணமாய், கடைகளில் கிடைக்கும் புத்தகங்களை வாங்கி, அதில் கண்டுள்ளபடி பெயர்களை கணித்து வைப்பதால் பார்த்திருப்போம், உதாரணத்திற்கு ஒருவர் 6எண்ணில் பிறந்தவராக இருந்தால் 24, 33, என்று ஏதாவது நல்ல பலன் உள்ள 6எண் வருகின்ற மாதிரி பெயர்களை வைத்துக்கொள்வது வழக்கம்!

இப்படி செய்வதைத்தான் தவறு என்கிறார்கள் எண்கணித ஜோதிட வல்லுனர்கள், ஒருவருடைய ஜாதகத்தை ஆராய்ந்து, அவருடைய பெயர் எண், விதி எண் இவற்றில் எந்த என்னை ஆளும் கிரகவலிமை வாய்ந்தது என்று பார்க்கவேண்டும். நட்பு எண்களின் கிரகங்களும் இந்த ஜாதகத்தில் உச்சமா அல்லது நீச்சமா என்று அறிந்து சரியான என்னைக் கண்டறிந்து பெரிய வேண்டும்.

அப்படி செய்யும்போது, சில வல்லுனர்கள் ஒருவருடைய கைரேகையையும் கவனித்து பெயர் வைப்பார்கள். காரணம். இப்படியெல்லாம் ஜாதகம், கைரேகை அனைத்தையும் கவனித்து எண் கணிதத்தைக் கணித்து அதன்படி பெயர் வைக்கும்போது அது அதிர்ஷ்டத்தை உடனடியாக அள்ளித்தரும் என்பதில் ஐயம்இல்லை.

## தொழில்

தொழிலுக்கும் இப்படித்தான்! ஒருவரது ஜாதகத்தில் அன்னாருக்கு இரும்புத் தொழில் அமைந்தால் தான் நல்வாழ்வு என்று இருக்கும். பிறந்த என்னை மட்டுமே கருத்தில் கொன்டு அவருக்கு ஜவுளித்தொழில் கைகொடுக்கும் என்று முடிவு செய்து, என்ன தான்  அதிர்ஷ்டகரமான எண்ணில் ஜவுளித்தொழில் அமைந்தாலும் அது வெற்றிகரமாக அமையாது ஜாதகப்படி என்ன தொழில் வாய்க்குமோ அந்தத் தொழிலை அமைத்து எண் கணிதப்படி அதிர்ஷ்டகரமான தொழிற்பெயர் வைக்கும்போது தொழில் வெற்றிபெற்று அருமையான எதிர்காலம் அமையும்.

ஒருவர் இந்தத் தொழில் தான் செய்து வாழ வேண்டும் என்பது பூர்வஜென்ம பிராப்தம்! அதை அறிந்து செயல்பட்டால் எண் கணிதம் வெற்றியைக் கொடுக்கும்.

## திருமணத்தில் எண்கணிதம்

திருமனம் என்று வருகின்ற போது, ஜாதகத்தைப் பார்த்து, ஆண், பெண் இருவரின் ராசி, நட்சத்திரம் அடிப்படையில் பொருத்தம் பார்த்தும் கிரகங்களின் நிலைப்பாட்டைப் பொறுத்தும் திருமணங்கள் நிச்சயக்கப்படுகின்றன.

இதேபோல், எண் கணிதத்தில் ஆண், பெண் இருவரின் பிறந்த தேதிகள் ஒன்றுக்கொன்று நட்பு கொண்டவையாக அவர்களின் பிறவி எண் ஒத்துப் போகிறதா என்று ஆராய வேண்டும்.

இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது திருமணத் தேதி திருமணம் நடைபெறுகின்ற நாளின் கூட்டுத் தொகையே இங்கு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஜோதிடப்படி, முகூர்த்த நாள் என்று குறிப்பிட்டிருக்கும் சில நாட்கள் எண் கணிதப்படி ராசி இல்லாதவவை என்று தீர்மானிக்கப் பட்டுள்ளன. இதற்குக் காரணம், அந்த நாளின் கூட்டு எண்! இந்த கணக்குப்படி, திருமணம் ஆனபின் பிரிந்தவர்கள், விபத்தில் கணவனையோ மனைவியையோ இழந்தவர்கள் பிரச்சினையோடு வாழ்பவர்கள், குழந்தை இல்லாத நிலை என்று எத்தனையோ சங்கடங்கள் நிகழ்ந்துள்ளதைப் பார்க்கும் போது எண்கணிதம் கூறுகின்ற உண்மையை உணர முடிகிறது.



## உத்தியோகப் பிரச்சினைகள்

அலுவலகங்களில் வேலை செய்யும் பலருக்கு மேலதிகாரிகள் அல்லது சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அறவே இருக்காது அதோடு வீண்பழி, அவதூறு எல்லாம் சேர்ந்து மன உளைச்சலை ஏற்படுத்தி, இந்த வேலையையே உதறிவிட்டு செல்லலாமா என்னும் அளவுக்கு துன்பம் ஏற்படும். இப்படிப்பட்டவர்கள் தங்கள் துன்பங்கள் நீங்கி நிம்மதியாக பணியாற்றும் சூழ்நிலையை எண் கணிதத்தால் உருவாக்க இயலும், அவர்களுக்கு அதிர்ஷ்டமான தினத்தைக் கண்டுபிடித்து அந்த நாளில் வேலைக்கு செல்ல..தொல்லைகள் நீங்கி நிம்மதி கிடைக்கும்.

எண்கணிதத்தை பின்பற்றினால், நமது அதிர்ஷ்ட தேதிகளை அறிந்து அந்த தேதிகளுக்காகக் காத்திருந்தால், அந்த நாட்களில் நல்லவை இனிதே நடக்கும். இப்படியே பழகினால் நமக்கு அதிர்ஷ்டமான தினங்களில் நல்லவை தானாகவே நடக்கத் தொடங்கிவிடும்.

.....இன்னும் பார்ப்போம்

~ பன்னீர்செல்வம்

## சித்தர் பூமி

# தேவி மாயம்மா



தனக்கென வாழ்பவன் விலங்கு,

தனக்காகவும் பிறருக்காகவும் வாழ்பவன் மனிதன், பிறருக்காகவே வாழ்பவன் மகான்! என்ற கூற்று பல காலமாக உலவிவருகிறது.

அப்படிப்பட்ட ஞானிகள் எங்கே? எப்போது பிறக்கிறார்கள்? எப்படி வெளிப்படுகிறார்கள் என்பவை எல்லாமே தேவ ரகசியம்!

அந்த மகான்கள் சாதாரண மனிதர்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டே காணப்படுவர்! சாதாரண மனிதர்களின் பார்வைக்கு பித்தனாய், பிச்சைக்காரனாய் தோற்றமளிக்கும் அவர்களை அடையாளங்காட்ட பிறிதொரு ஞானியால் மட்டுமே முடியும். அதன் பிறகே, மக்கள் அந்த மகானின் பெருமையை அறிந்து, உணரத் தொடங்குவார்கள்.

மகான்களின் புண்ணிய பூமியாம் தமிழ்நாட்டில் அப்படியொரு மகான் வாழ்ந்து ஜீவசமாதி அடைந்துள்ளார். எத்தனையோ ஞானிகளில் இவர் சற்று வித்தியாசமானவர். ஆம்! பிற உயர்களை தன்னுயிராய் மதித்தனர். உண்மை தான், நாய், பசு இவையெல்லாம் மனிதர்களைப் போலவே இந்த தூய ஜீவனை சுற்றிச் சுற்றி வந்தன.

இவையெல்லாம் எங்கே நடந்தது?

இந்திய நாட்டின் தென் கோடி! தாய்த்தமிழ் நாட்டின் தென் கோடியாம் குமரிமுனையில் குமரியன்னையின் பாதங்களை நித்தமும் தழுவிச் செல்லும் கடலலைகள் உருண்டோடும் கன்னியாகுமரியில் சந்தாரம் செய்து கொண்டிருந்தது அந்த பெண் தெய்வம்!

யார் இவர் என்று யாருக்கும் தெரியாது! இவர் பெயர் என்ன? அதுவும் தெரியாது! இவர், இந்த கன்னியாகுமரி கடற்கரையில் என்ன செய்து கொண்டிருக்கிறார்? இவரது உறவினர்கள் யாராவது உண்டா?

அனைத்து கேள்விகளுக்கும் ஒரே பதில் தெரியாது! என்பது தான்!

அதிசய பதில்

இரவு, பகல், வெயில், மழை என்று பாராமல் கன்னியாகுமரி கடற்கரையையே வலம்வரும் இந்த பெண் ஞானியை எவ்வளவு காலமாக உங்களுக்குத் தெரியும்? என்று 70 வயது மதிக்கத்தக்க முதியவரிடம் கேட்டார்கள். அதற்கு அவர் சொன்ன பதில், என் சிறுவயது முதலே இவரைத் தெரியும், ஆனால், என் தாத்தா காலத்திலேயே இவர் இந்த கடற்கரையில் உலவி வந்ததாக சொல்வார்கள், என்றாராம்! அப்படியென்றால் இந்த பெண் ஞானியின் வயதை யாரால் கணிக்க முடியும்? எப்படி கணிப்பது!

இந்த பெண் ஞானியின் பெயர், "தேவி மாயம்மா" வயதான தோற்றம்! உடைகளை ஒரு பொருட்டாகவே கருதாத உடல்! ஆம்! இருவரும் ஒரு அவதூதர் தான்! உடை அணிவதில் விருப்பம் இல்லை! பாமர்களின் பார்வைக்கு, கடற்கரையில் பிச்சையெடுத்துக்கொண்டிருக்கும் புத்தி பேதலித்து முதிய பெண்மணி என்று தான் எண்ணத் தோன்றும்!

ஆனால், முக்கடல் சங்கமிக்கும் இந்த இடத்தில் இருந்தபடி பிரபஞ்சத்தோடு நிதமும் பேசி, நன்மை, தீமைகளை கணிக்கும் தெய்வமகள் என்பது எவருக்குமே தெரியாது!

எத்தனை வெயில் அடித்தாலும் சூடு காணாத தேகத்தோடு கடற்கரையில் உலவி, ஒதிங்கிக்கிடக்கும் கிளிஞ்சல்களைப் பொறுக்கிக் கொண்டிருப்பார்! இதைக்கூட ஏனோ தானோ வென்று செய்யாமல் கருமமே கண்ணானவர் போன்று கிளிஞ்சல்களை சேகரிப்பார் யார் அழைத்தாலும் யார் குறுக்கே வந்தாலும் நிமிர்ந்து கூட பார்க்க மாட்டார்! சொல்லப் போனால் இந்த கிளிஞ்சல்கள் சேகரிப்பதை மிகமிக கவனமாக தவம் செய்வதைப்போல் செய்வார்! கண்ணை உறுத்தும் குப்பை, காகிதங்களையும் அவற்றோடு சேகரித்து, பகுதியை தூய்மையாக்குவார். எதற்காக இதை செய்கிறார்? ஏன் இந்த தவம்? அது பிரபஞ்சம் மட்டுமே அறிந்த ரகசியம்!

திடீரென கடலுக்குள் இறங்கி செல்வார்! பல நேரங்களில் எங்கு போனார் என்றே தெரியாத அளவுக்கு கடலுக்குள் காணாமல் போய் விடுவார்! அங்கே அலைகள் மோதும் பாகைளில் அடர்ந்து கிடக்கும் பாசிகளை சேகரித்து வருவார். கிளிஞ்சல்கள் குப்பைகள், பாசிகள் இவற்றோடு, வாழை மட்டை போன்ற ஈரப் பொருட்களைக் கொண்டு வந்து கடற்கரையில் ஓரிடத்தில் குவிப்பார்.

இதெல்லாம் எதற்காக? உலக நன்மைக்காக கோவில்களில், மண்டபங்களில் யாகம் செய்வார்கள் அல்லவா? இவர் தினம் தினம் இந்த ஈரப் பொருட்களை எரித்து கடற்கரையில் யாகம் நடத்துவார் இந்த யாகம், இவரது குடும்ப நலனுக்காக அல்ல, உலக நன்மைக்காக உலகத்தில் உள்ள மனிதர்கள் மட்டும் இல்லை, அனைத்து உயிர்களுக்காகவும் இந்த தாய் நடத்தும் யாகம் என்றே அனைவரும் உணர்ந்தவர்.

பசி என்றால் என்னவென்றே தெரியாது, யாராவது உணவுப்பொருளை இவருக்கு சாப்பிடக்கொடுத்தால் தன்னை சுற்றியிருக்கும் நாய், மாடு இவைகளுக்கு தன் கையில் ஊட்டி விடுவார் மீதியை தன்னை வணங்கி நிற்கும் பக்தர்களுக்குக் கொடுப்பார் இதையே பிரசாதமாய் நினைத்து, அதனை சாப்பிட்டு நோய்கள் நீங்கி, நல்வாழ்வு பெற்றோர் ஏராளம்!

யாருக்கும் இவர் வாய்திறந்து ஆசிகள் வழங்கியது இல்லை! இவரது கருணைப் பார்வையே கஷ்டங்களைப் போக்கிய அதிசயம் அன்றாடம் நடைபெற்றது.

உலக உயிர்கள் அனைத்தையும் மட்டுமல்ல! பிரபஞ்ச இயக்கத்தையும் இவர் உணர்ந்து ஆட்டிவைக்கும் ஆற்றல் பெற்றதால் இவரை பிரமாண்டத்தின் ஞானேஸ்வரி என்றனர்.

ஞானம்! இவரது அசைவு, கருணை, உடலின் அன்று ஒவ்வொன்றும் ஞானத்தின் அடையாளமாய் இருந்தது, உணவு, உடை, இயற்கைத்தாகும் எதுவுமே இவரை பாதித்ததில்லை.

எத்தனை வயது என்றே கணக்கிட முடியாத இந்த இறைமகளை பார்வதியின் அம்சம் என சொன்னது யார்? கசவனம்பட்டி நிர்வாண சுவாமிகள், புரவிப்பாளையம் கோடி சுவாமிகள் போன்றோர் இந்த ஞானக்கடலின் இறைத்தன்மையை சிலாகித்து சொன்னதால்தான் இவரது மகிமையை அனைவரும் உணரும் நிலை ஏற்பட்டது. இந்த மாயாதேவியாள் மணிப்பார்வை தங்கள் மேல் பட்டதால் தலைமுறை சாபங்கள் நீங்கி, தழைத்தோங்கி வளர்ந்தவர்கள் அனேகம் பேர் கடற்கரையை சுற்றிவரும் இவரை சுற்றி வந்து, இவர் தரும் பிரசாதத்தைப் பெற்றுசுகம்கண்ட பக்தர்கள் எண்ணிலடங்கார்!

மாயையில் சிக்கியுள்ள மனிதர் வாழ்வை மீட்டெடுக்க பல மாயங்கள் செய்த தேவிபார்வதி என்னும் இந்த மாயம்மா, ஜீவ சமாதி அடைய எண்ணிய போது. இவர் தேர்ந்தெடுத்தது சேலம்! ஆம்! சேலத்தில் ஏற்காடு செல்லும் காலையில் இந்த ஞானேஸ்வரி ஜீவசமாதி அடைந்தார்.

இன்றும் தனது சூட்சும சரீரத்துடன் வாழ்ந்து வரும் அன்னை மாயம்மா, மனிதப்பிறவியின் இடர் தீர்க்க அருளாசி புரிகின்றார்.

தேவி மாயம்மாவின் ஜீவசமாதியை உண்மையுடன் வந்து வணங்கும் அனைவரும் சாந்தியடைந்து சிறந்த வாழ்வினை அடைகிறார்கள்.

மனித உருவில் வந்த தெய்வம் இங்கே ஜீவசமாதியடைந்துள்ளது. தெய்வத்தை வணங்குவோம். நிம்மதி அடைவோம்.

~ பன்னீர்செல்வம்



# மூலிகை ரகசியம்



## குப்பைமேனி (Acalypha Indica)

நமது மூலிகை ரகசியம் பகுதியில் நாம் காணவிருப்பது குப்பைமேனி என்னும் சாதாரண... ஆனால், பற்பல சிறப்புகள் வாய்ந்த மூலிகை.



மற்ற எந்த மூலிகையையும் விட இந்த குப்பைமேனி எளிதாகவும் எங்கெங்கும் அதாவது ஒவ்வொரு வீட்டிலும் கிடைப்பதால், இதை மூலிகை என்று கூறி பயன்படுத்தாமல் சாதாரணமாக இலை என்று சொல்லியே பயன்படுத்துகிறார்கள், கிராமம் , நகரம் என்று பாகுபாடில்லாமல் குப்பைகள் எல்லா இடங்களிலும் காணப்படும். அதனாலேயே இதற்கு குப்பைமேனி என்று பெயர் வந்தது.குப்பையின் மேனியெங்கும் படர்ந்திருப்பதால் மட்டுமல்ல, குப்பை போன்று நம் மேனியை சீர்படுத்தி, சிறப்புடன் வைப்பதே இந்த குப்பைமேனி மூலிகை. அந்தக் காலத்து பாட்டிமார்கள், குப்பை மேனியை கைகண்ட மருந்தாய் தினந்தினம் பயன்படுத்தியதால் பாட்டி வைத்தியத்தில் குப்பைமேனி முதலிடம் பெற்றது.

இந்த செடியின் இலைகள் மிகவும் சிறியதாகவும் காய்கள் மிளகு அளவிலும் இருக்கும். இதன் இலைகள் வேர் அனைத்துமே சிறந்த மருத்துவ குணங்கள் நிறைந்தவை என்று கண்டறிந்து இதனை பயன்படுத்தி வருகின்றனர்.

பயன்கள் - இந்த குப்பைமேனி மூல நோய், தோல் நோய்கள், நீரிழிவு நோய், நோய் எதிர்ப்புத்திறன் ஆகியவற்றோடு இருமல், தொண்டைக்கட்டு, வீக்கம், புண்கள் ஆற்றும் திறன் என்று நிறைய பயன்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

பயன்படுத்தும் முறை - சொறி, சிரங்கு, அலர்ஜி போன்ற தோல் நோய்களுக்கு குப்பைமேனி இலையோடு மஞ்சள், உப்பு சேர்த்து அரைத்து மேலே பூச வேண்டும், பிறகு 3மணி நேரம் கழித்து கழுவினால் நாள்பட்ட தோல் நோய்கள் குணமாகும். இதன் இலையை சாறு எடுத்து தேங்காய் எண்ணெயால் கலந்து தடவினால் மூட்டு வலிகள் நீங்கும்.

பெண்களின் முகத்தில் உள்ள பருக்கள், கரும்புள்ளிகள் நீங்க குப்பைமேனி காற்றுடன் மஞ்சள் கலந்து முகத்தில் பூசி, சிறிது நேரம் கழித்து கழுவினால் அவை மறையும். கைப்பிடியளவு குப்பைமேனி இலையை கஷாயம் செய்து குடிக்க, இருமல், சளி குணமாகும். இலையை அரைத்து பத்துபோட புண்கள் விரைவில் ஆறும். 2 நாளுக்கொருமுறை குப்பைமேனி சாற்றினை குடித்து வந்தால் ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு சீராகும். இலையை சுத்தம் செய்து மென்று தின்ன, ஜீரண உறுப்புகள் பலம்பெறும். நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டும் குப்பை மேனியை பயன்படுத்தி நன்மைகள் அடைவோம்.

# குரு பெயர்ச்சி – 2020

குரு பகவான் எனப் போற்றப்படும் வியாழன், பல நன்மைகளை அள்ளித் தரும், பூரண சுப கிரகம் ஆவார். இவர், இந்த 2020 நவம்பர் மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அன்று, தனுசு ராசியிலிருந்து, மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார்.

## மேஷம்



- வேலை, தொழிலுக்கு மிகவும் சாதகமாக இருக்கும் என்று கூற முடியாது.
  - சரியான திசையில், முறையான முயற்சிகள் செய்தால், இப்பொழுது முன்னேற்றம் காண முடியும்.
  - முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளும் முயற்சிகள் போதுமானதாக இருக்காது.
- தினசரி நடவடிக்கைகளில் கூட ஆர்வம் இழந்து விடக் கூடும்.
- வேலையிலும் சேவை மனப்பான்மையுடன் செயலாற்றாமல் போகலாம்.
- வாடிக்கையாளர்களுடன் நிலவும் உறவும், சுமாராகவே இருக்கக் கூடும்.
- பணியில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான சில வாய்ப்புகள் கண்டிப்பாக இருக்கின்றன எனலாம்.
- செயல்களுக்கு உரிய பலன்கள், சரியான நேரத்தில் கிடைக்காமலும் போகலாம்.
- செல்வம், சொத்து விஷயங்களும் சாதகமாக அமையாமல் போகலாம். கணிசமான சேமிப்புகளையும் செய்ய இயலாது. இத்துடன் கூட, செலவுகளும் அதிகரிக்கலாம்.
- திடீரென்றும், ஆடம்பரமாகவும் செய்யும் செலவுகள் எனலாம். சொத்து வாங்குவது, விற்பது போன்றவற்றில் ஈடுபட்டால், அதிலும் நஷ்டம் ஏற்படும் வாய்ப்புள்ளது.
- அசையா சொத்து அல்லது புது வாகனம் வாங்கும் முயற்சியும், நேரத்தில் வெற்றி பெறாமல் போகலாம்.
- வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவதிலும் ஆர்வம் இருக்காது.
- ஆரோக்கியமும் கவலை தரலாம். மருத்துவர் அல்லது மருத்துவமனைக்கு செல்லவும் நேரலாம். கால் பாதத்தில் புண் போன்றவை பாதிக்கலாம்.
- வாழ்க்கைத் துணை மற்றும் பிற உறவினர்களுடனான உறவிலும் சில பிரச்சனைகள் எழலாம். ரத்த அழுத்தம், கொழுப்பு போன்றவை கட்டுக்குள் இருந்தாலும், அவை குறித்தும் கவனம் தேவை.

"ஓம் விருஷபத் வஜாய வித்மஹே
க்ருணி ஹஸ்தாய தீமஹி
தந்நோ குருஹ் ப்ரசோதயாத்"

குரு பகவான் எனப் போற்றப்படும் வியாழன், பல நன்மைகளை அள்ளித் தரும், பூரண சுப கிரகம் ஆவார். இவர், இந்த 2020 நவம்பர் மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அன்று, தனுசு ராசியிலிருந்து, மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார்.

# ரிஷபம்



- வாழ்க்கையில் பல வகைகளிலும் அதிர்ஷ்டகரமாக அமையக்கூடும்.
- வயதில் மூத்தவர்கள், பெற்றோர்களுக்கு நிகரானவர்கள், அலுவலக உயர் அதிகாரிகள் போன்றவர்களுடன், உறவு வலுப்பெறும்.
- முழு ஆதரவும், பூரண நல்லாசியும் கிடைக்கும்.
- இளைய உடன்பிறப்புகள், சக ஊழியர்கள், அண்டை அயலார் ஆகியவர்களுடன் உறவு சற்றே சீர்கெடலாம் என்பதால், கவனம் தேவை. இது, சீராகிவிடக் கூடும்.
- பிரார்த்தனைகளை நிறைவேற்றுவதன் காரணமாக, இறைவனின் பரிபூரண அருளும் க் கிட்டும்.
- முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் என்பதால், பொதுவாக வாழ்க்கையும் வெற்றிகரமாகவே அமையும்.
- அன்பு, கருணை, அறிவாற்றல், தன்னம்பிக்கை, கற்பனை வளம் போன்ற நற்குணங்களும் பெருகும்.
- பயணங்களில் முதலில் அலைச்சல் ஏற்பட்டு, பிறகே உரிய பலன்கள் கிடைக்கும். துணிச்சலும், பேச்சாற்றலும் கூட சற்றே குறைந்து காணப்படும்.
- நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துவதில் சிக்கல் ஏற்படும் என்பதால், இப்பொழுது நேரம் தவறாமலும், ஒழுங்குடனும் நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.
- ஒத்தவர்கள், அறிமுகமானவர்கள் ஆகியவர்களுடன் பழகுவதை அதிகம் விரும்பமாட்டீர்கள்.
- உண்மையான நட்பின் அருமையை உணருவது அவசியம். சமூக வலைத்தளங்களின் காரணமாக சில எதிர்மறை விளைவுகளைச் சந்திக்கலாம். , அவற்றைப் பயன்படுத்துவதில் கவனம் தேவை.
- இப்பொழுது அடையும் ஆதாயங்கள் குறையலாம். வருமானமும் நிலையாக இல்லாமல் போகலாம்.
- ஆரோக்கியத்திலும் சில பின்னடைவுகள் ஏற்படலாம் என்பதால், கவனம் தேவை.

"ஓம் விருஷபத் வஜாய வித்மஹே
க்ருணி ஹஸ்தாய தீமஹி
தந்நோ குருஹ் ப்ரசோதயாத்"

குரு பகவான் எனப் போற்றப்படும் வியாழன், பல நன்மைகளை அள்ளித் தரும், பூரண சுப கிரகம் ஆவார். இவர், இந்த 2020 நவம்பர் மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அன்று, தனுசு ராசியிலிருந்து, மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார்.



# மிதுனம்

- வேலை தொழில் தொடர்பான, மற்றும் அறிவுபூர்வமான முன்னேற்றங்களுக்குப் பலதடைகளை ஏற்படுத்தலாம்.
- ஏறத்தாழ, திரும்பும் அனைத்துத்திசைகளிலும் எதிர்ப்புகள் எழலாம்.
- சவால்களை எதிர்கொண்டு வெல்வதற்கு, மனோ பலமும், முழு ஆற்றலும் தேவைப்படும்.
- சில எதிர்மறை மாற்றங்களும், சர்ச்சைக்குரிய பேச்சுக்களும் பிரச்சனைகளை அதிகரிக்கலாம்.
- கவலை வேண்டாம், நிலைமையை கவனமாகக்கையாண்டால், இறுதி வெற்றி உங்களுக்கே
- பொறுமை மற்றும் விடாமுயற்சி ஆகியவற்றை சோதனைக்கு உள்ளாக்கும் காலம் என்பதால், வாழ்க்கைப்பாதையைக்கட்டுப்படுத்தி, வழி நடத்துவது கையில் உள்ளது
- அதே நேரம், கோபம், எளிதில் உணர்ச்சிவசப்படுதல், வாதவிவாதங்களில் ஈடுபடுதல் போன்ற எதிர்மறைகள் மிகவும் அதிக மாகலாம்.
- தொழிலைப்பொறுத்த வரை, கடும் முயற்சிக்குப்பின்னரே, விரும்பும் முடிவுகளைப் பெறலாம்.
- ஊக்கத்தொகை, பதவி உயர்வு போன்றவற்றையும் இப்பொழுது எளிதில் எதிர்பார்க்க முடியாது.
- சமுதாயத்தில் புகழ், அதிகாரம், கௌரவம் போன்றவையும் பெரிய அளவில் உயரவாய்ப்பில்லை.
- அறிவு, தொழில் நுட்பத்திறன் போன்றவற்றை மேம்படுத்திக் கொள்வதும் கடினமாக இருக்கலாம். , இதுகுறித்து மிகுந்த முயற்சி எடுப்பது அவசியம்.
- பணம், சொத்து விஷயங்களுக்கு இது கடினமான காலமாக இருக்கக்கூடும்.
- சேமிப்பு குறைவதால், பொருளாதாரத் தேவைகளை சமாளிப்பதும் எளிதாக இல்லாமல் போகலாம்.
- பொதுவாக நிதி நிலை கட்டுப்பாட்டுக்குள் இருக்காது என்பதால், பணம் செலவழிப்பதில் மிகுந்த எச்சரிக்கை தேவை.
- எதிர்பாராத திடீர் ஆதாயங்கள் போன்றவை குறித்து, சாதகமற்ற க் கால கட்டத்தில், கனவு கூடக்காண முடியாது.

"ஓம் விருஷபத் வஜாய வித்மஹே
க்ருணி ஹஸ்தாய தீமஹி
தந்நோ குருஹ் ப்ரசோதயாத்"

குரு பகவான் எனப் போற்றப்படும் வியாழன், பல நன்மைகளை அள்ளித் தரும், பூரண சுப கிரகம் ஆவார். இவர், இந்த 2020 நவம்பர் மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அன்று, தனுசு ராசியிலிருந்து, மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார்.

# கடகம்



- செல்வச் செழிப்பில் கொழிக்கச் செய்யும் எனலாம்.
- துணை மற்றும் நெருக்கமானவர்களுடன் உறவு, மிகவும் மகிழ்ச்சிகரமாக இருக்கும். வாழ்க்கையும் பொதுவாக, எளிதாகச் செல்லும்.
- தைரியத்துடனும், தன்னம்பிக்கையுடனும் செயலாற்றுவீர்கள். இது தடைகள் அனைத்தையும் திறமையாகச் சமாளிக்க உதவும். சாதகமான காலகட்டம் என்பதால், விருப்பங்கள் நிறைவேற இது உகந்த நேரமாக இருக்கும் எனலாம்.
- அனைவரிடமும் மென்மையாகவும், மரியாதையாகவும் பழகுவீர்கள்.
- வயதில் மூத்தவர்களுடன் சில பிரச்சனைகள் எழலாம் என்பதால், அவர்களுடன் பழகுவதில் கவனமாக இருக்கவும்.
- நண்பர்களிடமிருந்து முழு ஒத்துழைப்பு கிடைக்கும்.
- பயணங்கள் நன்மை தரலாம்.
- விமானப் பயணங்கள் மேற்கொள்ள வாய்ப்பில்லை.
- மதம், ஆன்மீகம் பொன்றவற்றில் அதிக ஈடுபாடு இருக்காது. சட்டம், பொது இடங்களில் விதி முறைகள் ஆகியவற்றையும், முறையாக அனுசரிக்காமல் போகலாம்.
- தனிப்பட்ட மற்றும் குடும்ப நியதிகளையும் மீறி விடலாம்.
- நேரத்தில் சுயக் கட்டுப்பாட்டுடன் இருப்பது நன்மை தரும்.
- கருத்து வேறுபாடுகள் எழுவதற்கும் வாய்ப்புள்ளது.

"ஓம் விருஷபத் வஜாய வித்மஹே
க்ருணி ஹஸ்தாய தீமஹி
தந்நோ குருஹ் ப்ரசோதயாத்"

குரு பகவான் எனப் போற்றப்படும் வியாழன், பல நன்மைகளை அள்ளித் தரும், பூரண சுப கிரகம் ஆவார். இவர், இந்த 2020 நவம்பர் மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அன்று, தனுசு ராசியிலிருந்து, மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார்.

# சிம்மம்



- மிதமான பலன்களைத் தரும் குருபெயர்ச்சி.
- உடல் நிலை மோசமாக இல்லாவிட்டாலும், நோய்கள், தொற்றுகள் போன்றவை பாதிக்கக்கூடும்.
- வியாதிகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ள, உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்துக் கொள்வது அவசியம்.
- பிறரிடமிருந்து தொற்று நோய் ஏற்படுவதற்கும் சாத்தியம் உள்ளது.
- எதிராக, தேவையற்ற போட்டி, பொறாமை போன்றவையும் கிளம்பக்கூடும்.
- எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.
- நிதி நிலை மிகவும் திருப்திகரமாக இருக்கும் என்று கூறுவதற்கில்லை.
- நேரத்தில், எதிர்காலத்திற்காக சொத்தோ, பணமோ எளிதில் சேமிக்க முடியாமல் போகலாம்.
- காரணம் அதிக செலவுகளாக இருந்தாலும், இவை கட்டுக்குள் தான் இருக்கும்.
- செலவுகள், பொதுவாக, நல்ல விஷயங்களுக்காகச் செய்யப் படுபவையாகவும் இருக்கும்.
- பொருளாதார நிலையை நன்கு உணர்ந்து, அதைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு இது சரியான நேரமாக இருக்கும்.
- கடன் வாங்கவோ அதற்கு விண்ணப்பிக்கவோ வேண்டாம்.
- அதை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்துவது கடினமாக இருக்கக் கூடும்.
- பணப்பற்றாக் குறை காரணமாக, பழைய கடன்களையும் அடைக்க முடியாமல் போகலாம்.
- வேலை நிலவரம் முன்னேற்றகரமாக இருக்கும்.
- அலுவலகத்தில், ஏதோ ஒரு நல்லசேதி தேடி வரவும் வாய்ப்புள்ளது.
- பிறர் கண்களுக்கு முன், மதிப்பும் உயரக்கூடும்.
- தலைமைப் பண்பு பலராலும் நன்கு போற்றப்படும்.
- புகழும், கௌரவமும் கூட அதிகரிக்கும்.

"ஓம் விருஷபத் வஜாய வித்மஹே
க்ருணி ஹஸ்தாய தீமஹி
தந்நோ குருஹ் ப்ரசோதயாத்"

குரு பகவான் எனப் போற்றப்படும் வியாழன், பல நன்மைகளை அள்ளித் தரும், பூரண சுப கிரகம் ஆவார். இவர், இந்த 2020 நவம்பர் மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அன்று, தனுசு ராசியிலிருந்து, மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார்.



# கன்னி

- அதிர்ஷ்டத்தை அளிக்கும் பெயர்ச்சியாக விளங்கும்.
- மதம், ஆன்மீகம் போன்றவற்றை நோக்கி, மனம் திரும்பும்.
- செலுத்த வேண்டிய பிரார்த்தனைகளை, இப்பொழுது செலுத்தி முடிக்கக்கூடும்.
- யோகா, தியானம் போன்றவற்றில் ஆர்வம் அதிகரிக்கும்.
- ஒவ்வொரு நடவடிக்கையையும், நியாயத்தின் அடிப்படையில் மேற்கொள்வீர்கள்.
- சட்டதிட்டங்களையும் மிகத் தீவிரமாகப் பின்பற்றுவீர்கள். , சுயக்கட்டுப்பாடு மிக்க மனிதர் என மக்கள் போற்றவும்கூடும்.
- மற்றபடி லாபம், ஆதாயம் போன்றவை சுமாராகவே இருக்கும்.
- எதிர்காலத்திற்குச் சேமிப்பதும் கடினமாக இருக்கும்.
- உறவுகளில் பல சிக்கல்களும் எழலாம்.
- கணவர், மனைவியுடன் நிலவும் உறவிலும் மகிழ்ச்சி இல்லாமல் போகலாம்.
- குடும்பத்தினர் ஒருவருடன் ஒருவர் நன்றாக ஒத்துழைக்காமல் போகலாம்.
- பல குடும்பப் பிரச்சனைகளும் எழலாம்.
- தொழிலுக்கும் இது சாதகமான காலம் என்று கூற முடியாது. தொழில் கூட்டாளிகளுக்கிடையே சச்சரவுகளும் எழலாம்.
- வாழ்க்கையை இனிமையாகக்கழிக்க முடியாத காரணத்தால், மனசோர்வும், மன அழுத்தமும் ஏற்படலாம்.
- இப்பொழுது நல்ல அறிவுத்திறனுடன் விளங்குவீர்கள்.
- இது நடவடிக்கைகளில் நன்கு வெளிப்படும்.
- பூர்வ புண்ணியம் எனப்படும், முன்பு செய்த நற்செயல்களின் விளைவாக, பல நன்மைகள் விளையும்.
- பல விருப்பங்கள் நிறைவேறும்.
- மனநிறைவும், மகிழ்ச்சியும் உண்டாகும்.

"ஓம் விருஷபத் வஜாய வித்மஹே
க்ருணி ஹஸ்தாய தீமஹி
தந்நோ குருஹ் ப்ரசோதயாத்"

குரு பகவான் எனப் போற்றப்படும் வியாழன், பல நன்மைகளை அள்ளித் தரும், பூரண சுப கிரகம் ஆவார். இவர், இந்த 2020 நவம்பர் மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அன்று, தனுசு ராசியிலிருந்து, மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார்.

# துலாம்



- வேலை, தொழில், சொத்து, வெளிநாட்டு வாய்ப்புகள் போன்றவற்றில் சாதகமாக அமையும்
  - உத்யோகத்தில் தவிர்க்க முடியாத சில தடைகளை எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.
- சிறந்த செயலாற்றல் மூலம் இவற்றை எளிதில் சமாளிக்க முடியும்.
- அலுவலகத்தில் சக ஊழியர்களுடன் நெருக்கம் சாதாரணமாகவே இருந்தாலும், ஆதரவு இல்லாமலேயே, வேலை முன்னேற்றம் காணமுடியும்.
- வருமானம் கணிசமாகவும், நிலையாகவும் இருக்கும்.
- இது தேவைகளை நிறைவேற்றப் போதுமானதாக இருக்கும்.
- சில எதிர்பாராத, திடீர் லாபங்கள் கிடைக்கும்.
- குடும்ப அல்லது பரம்பரை சொத்து வந்து சேரும்
- பிரகாசமான வாய்ப்புகளும் உள்ளன.
- பெரிய சொத்துக்கு சட்ட வாரிசாக இருக்கும் சாத்தியமும் உள்ளது.
- பொருளாதார நிலையில், திடீரென்ற ஒரு நல்ல மாற்றத்தை, எதிர்பார்க்கலாம்.
- சிலர் வெளிநாடு செல்லும் வாய்ப்பும் உள்ளது.
- சில சுபசெலவுகள் செய்யும் வாய்ப்புள்ளது.
- மகிழ்ச்சியும், திருப்தியும் அளிக்கும்.
- செலவுகளும் கூட, சாதாரண மானவையாகவும், கட்டுப்பாட்டுக்குள்ளும் தான் இருக்கும்.
- அன்புக்குரியவர்களுடன் வெளிப்படைத் தன்மையுடன் பழகுவீர்கள்.
- ஆதரவையும், நம்பிக்கையையும் பெற்றுத்தர உதவும்.
- தாயின் நிலையில் உள்ளவர்களுடன் உறவு சுமுகமாக இல்லாமல் போகலாம்.
- ஆரோக்கியத்திலும் பிரச்சனைகள் எழலாம்.

"ஓம் விருஷபத் வஜாய வித்மஹே
க்ருணி ஹஸ்தாய தீமஹி
தந்நோ குருஹ் ப்ரசோதயாத்"

குரு பகவான் எனப் போற்றப்படும் வியாழன், பல நன்மைகளை அள்ளித் தரும், பூரண சுப கிரகம் ஆவார். இவர், இந்த 2020 நவம்பர் மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அன்று, தனுசு ராசியிலிருந்து, மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார்.


# விருச்சிகம்



- ஒரு சாராசரியான காலகட்டமாக இருக்கும்.
- செயல்களை முறையாகச் செய்து முடிக்க, நேரத்தை பயன்படுத்திக் கொள்ளலாம்.
- உடன் பிறந்தவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு முன்னுரிமை அளிப்பது நல்லது.
- இது உறவுகளைவலுப்படுத்தி, சார்பாக ஏற்றுக் கொண்டுள்ள கடமைகளை நிறைவேற்ற உதவும்.
- கர்மாவை வலுப்படுத்திக் கொள்வதற்கும் இது உகந்த நேரம் எனலாம்.
- இது எதிர்காலத்தை மேன்மையாக்க உதவும்.
- பேச்சு, பிறருடன் தொடர்பு போன்றவற்றில் கவனமாக இருப்பது நல்லது.
- அறிவுரை, நலம் விரும்புவோரின் வாழ்க்கையில், இப்பொழுது ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்தும்.
- சிறு பயணங்கள் நன்மை தரும்.
- பொறுப்பான நடவடிக்கைகள், குடும்பத்தினருக்கு ஆதரவாக அமையும்.
- ஆற்றல் மிக்க செயல்பாடுகள் நல்ல பலன் தரும்
- அறிவாற்றல், என்னேரமும், கடுமையாக உழைக்கத் தூண்டும்.
- கால கட்டம், சுதந்திரமான முன்னேற்றத்துக்கு, பலவகையிலும் வழிவகுக்கும்.
- குடும்பத்தினர், உணர்வுகளை முழுமையாகப் புரிந்து கொண்டு ஆதரவு அளிப்பார்கள்.
- தேவையற்ற பேச்சுக்களையும், விவாதங்களையும் கண்டிப்பாகத் தவிர்த்து விடுவது அவசியம்.
- வேலை அல்லது தொழிலில், திறமைக்குச் சவாலான நேரமாக இருக்கக்கூடும்.
- சிறந்த செயலாற்றல் காரணமாக, முழுமையாக வெற்றி அடைவீர்கள்.
- பணிக்குத் தேவையான உத்திகளை அறிந்து கொள்வதன் மூலம், வளர்த்துக் கொள்ள முடியும்.
- நோய் நொடிகள் காரணமாக, சில பின்னடைவுகளை சந்திக்க நேரலாம்.
- உடல் சோர்வு, வயிற்றுவலி, முதுகுவலி போன்றவை தொந்தரவு தரலாம்.

"ஓம் விருஷபத் வஜாய வித்மஹே
க்ருணி ஹஸ்தாய தீமஹி
தந்நோ குருஹ் ப்ரசோதயாத்"

குரு பகவான் எனப் போற்றப்படும் வியாழன், பல நன்மைகளை அள்ளித் தரும், பூரண சுப கிரகம் ஆவார். இவர், இந்த 2020 நவம்பர் மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அன்று, தனுசு ராசியிலிருந்து, மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார்.



# தனுசு

- வேலை, தொழில், குடும்பம், செல்வம், சொத்து போன்றவற்றிற்கு நன்மை தருவதாக அமையும்.
- குடும்பத்தினர் ஒத்துழைப்புதருவார்கள் குடும்ப ஒற்றுமை ஓங்கும்.
- ஏதாவது பிரச்சனை எழுந்தாலும், திறமையாகவும், நாசூக்காகவும் கையாள முடியும்.
- செல்வம், சொத்து போன்றவற்றையும், சேர்க்க முடியும்.
- நேரத்தில், திடீர் ஆதாயங்கள், எதிர்பாராத பணவரவு போன்றவற்றுக்கும் வாய்ப்பு உள்ளது
- பரம்பரை சொத்தும் வந்து சேரக்கூடும்.
- குடும்ப அல்லது பரம்பரை சொத்துக்கு சட்டப்படியான வாரிசாகும் வாய்ப்பும் உள்ளது.
- இவை நிறை வேற, சிறிது காலதாமதம் ஆகக்கூடும்.
- பணியைப் பொறுத்த வரை, தீவிர முயற்சி, வேலையில் முன்னேற்றத்தைப் பெற்றுத்தரக் கூடும்.
- பதவி உயர்வு, உதிய உயர்வு, விரும்பிய இடமாற்றம் போன்றவைக்கான வாய்ப்புகளும் பிரகாசமாகும்.
- நேரத்தில் பல சவாலான பணிகளை ஏற்று நிறைவேற்றுவீர்கள்.
- வேலை பளு அதிகரிக்கும் என்பது உண்மை தான்.
- இதற்கான நற்பலன்கள்க் கண்டிப்பாகக் கிடைக்கும் என்று நம்பலாம்.
- இதன் காரணமாக மன அழுத்தம் ஏற்படும்படி நடந்து கொள்ளவேண்டாம்.
- பொது வெளியில், கௌரவம், புகழ், அதிகாரம் ஆகியவை உயரக்கூடும்.
- செயல்களுக்கும், எதிர்பார்த்தபடி, குறைந்த காலத்திலேயே பலன் கிடைக்கக் கூடும்.
- பரம்பரை சொத்து வரவாய்ப்பு உள்ளது.
- சொத்து எதையும் வாங்குவதற்கு வாய்ப்பு இல்லை.
- வீடு, நிலம் வாங்குவது, விற்பது போன்றவற்றில் ஈடுபட்டால் அதானால் அதிக நஷ்டம் ஏற்படக்கூடும்.

"ஓம் விருஷபத் வஜாய வித்மஹே
க்ருணி ஹஸ்தாய தீமஹி
தந்நோ குருஹ் ப்ரசோதயாத்"

குரு பகவான் எனப் போற்றப்படும் வியாழன், பல நன்மைகளை அள்ளித் தரும், பூரண சுப கிரகம் ஆவார். இவர், இந்த 2020 நவம்பர் மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அன்று, தனுசு ராசியிலிருந்து, மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார்.



# மகரம்

- நேர்மையாக முயற்சி செய்து, வாழ்க்கையில் நேர்மறையான அனுபவங்களைப் பெறுவதற்கு ஆதரவான காலமாக இருக்கும்.
- இந்த நேரத்தில் அனுசரித்துப் போவதும், புதிய சவால்களை எதிர் கொள்வதும் அவசியம்.
- அதிக ஆர்வத்துடன் செயல் படாவிட்டாலும் கூட, முடிவுகள் சாதகமாகவே இருக்கும்.
- முடிந்த அளவு முயற்சி செய்து, நல்ல பலன்களை அடையவும்.
- சிந்தனையும் சரியான கோணத்தில் இருக்கும்.
- பிறருக்கு முறையான அறிவுரையும் வழங்க முடியும்.
- திறமையைக் கொண்டு, அதிர்ஷ்டம் பெறலாம்.
- அதிர்ஷ்டம், முயற்சிகள் அனைத்துக்கும் ஆதரவு தரும்.
- சுய நல எண்ணத்துடன் வருபவர்களிடமிருந்து ஒதுங்கி இருக்க முயலுங்கள்.
- வாழ்க்கையை அனுபவிப்பதற்கான நடைமுறை அணுகு முறை, இந்தக் கால கட்டம் முழுவதும் ஆதரவாக இருக்கும்.
- வேலை அல்லது துறையில் இப்பொழுது அதிசயத்தைக் கூட நிகழ்த்தலாம்.
- இது அங்கீகாரத்தையும், புகழையும் பெற்றுத்தரக்கூடும்.
- அர்ப்பணிப்பு உணர்வுடன் சமுதாயத்திற்கும் சேவை செய்வீர்கள்.
- அதிக மன மகிழ்ச்சியும் உண்டாகும்.
- ஆரோக்கிய மேம்பட்டிற்கும் முன்னுரிமை அளிப்பீர்கள்.
- உணவுக்கு அளிக்கும் முக்கியத்துவம், நோய் நொடிகளை அண்ட விடாமல் தடுக்கும்.
- சுகாதார மற்ற உணவைத் தவிர்ப்பதும், சைவ உணவை உண்பதும் உடல் நிலைக்கு நன்மை தரும்.

"ஓம் விருஷபத் வஜாய வித்மஹே
க்ருணி ஹஸ்தாய தீமஹி
தந்நோ குருஹ் ப்ரசோதயாத்"

குரு பகவான் எனப் போற்றப்படும் வியாழன், பல நன்மைகளை அள்ளித் தரும், பூரண சுப கிரகம் ஆவார். இவர், இந்த 2020 நவம்பர் மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அன்று, தனுசு ராசியிலிருந்து, மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார்.



# கும்பம்

- தவறான அல்லது தெளிவற்ற பேச்சு, மன அழுத்தத்தைக் கொடுக்கலாம்.
- மற்றவர்கள் அதைத் தவறாகவும் புரிந்து கொள்ளலாம்.
- இது குறித்து, பொறுமையைக் கடை பிடிப்பது நிலைமைச் சமாளிக்க உதவும்.
- உறவினர்களுடன் நேரடியான மோதல் போக்கையும் தவிர்ப்பது அவசியம்,
- சமரசமாகப் போவது நல்லது.
- உறவினர்களுடனும், நண்பர்களுடனும் நல்லுறவை வளர்த்துக் கொள்வது,
- வாழ்க்கையை மேம்படுத்த உதவும்.
- சேமிப்புகள், பணத் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமானதாக இருக்கும்.
- தவறாமல் தியானம் செய்வது, மனதை ஒரு முகப்படுத்தும்.
- மன அமைதியையும் தரும். பொது நிகழ்ச்சிகளில்
- கலந்து கொள்வது, மன பாரத்தைக் குறைக்கும்.
- பணி தொடர்பான நடவடிக்கைகளில் உரிய கவனம் செலுத்துவது அவசியம்.
- குடும்பத்தினர் மீது, விசேஷ கவனம் செலுத்துவது அவசியம்.
- தேவையான நேரம் செலவிட்டு, நிலைமையை சரியாகப் புரிந்து கொள்வதும் அவசியம்.
- குடும்ப வாழ்க்கையில் சிறு சலசலப்புகள் எழலாம்.
- அவை தொடங்கும் பொழுதே உரிய நடவடிக்கை எடுக்க முயற்சிக்கவும்.
- வாழ்க்கைத் துணைவர், குழந்தைகள் ஆகியவர்களின் தேவைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிப்பதும் அவசியம்.
- கடும் முயற்சிகளின் காரணமாக, தனிஅடையாளமும், மரியாதையும் உருவாகும்.
- வசதிக்காக, விட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவதற்கு அதிக செலவு செய்ய வேண்டியிருக்கலாம்.

"ஓம் விருஷபத் வஜாய வித்மஹே
க்ருணி ஹஸ்தாய தீமஹி
தந்நோ குருஹ் ப்ரசோதயாத்"

குரு பகவான் எனப் போற்றப்படும் வியாழன், பல நன்மைகளை அள்ளித் தரும், பூரண சுப கிரகம் ஆவார். இவர், இந்த 2020 நவம்பர் மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அன்று, தனுசு ராசியிலிருந்து, மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார்.

# மீனம்



- வாழ்க்கையில் பெரும் நன்மையை அளிக்கும். விரும்பும் பலன்களையும் தரும் எனலாம்.
- செல்வமும், ஆரோக்கியமும் சிறந்து விளங்கும்.
  - கடுமையான நோய் நொடிகள் எதுவும் அணுகவாய்ப்பில்லை.
- எதாவது சிறுநோய் அல்லது தொற்று ஏற்பட்டாலும் அது விரைவிலேயே குணமடைந்துவிடும்.
- வருமானமும், லாபமும் பொருளாதார நிலையை நன்கு ஸ்திரப்படுத்தும்.
- முதலீடுகளிலிருந்து உரியகாலத்தில் வருமானமும் வந்து சேரும்.
- பங்குச்சந்தை, ம்யூசுவல்/பண்ட் போன்ற ஊக அடிப்படையிலான முதலீடுகளும் நல்ல வருமானம்தரும்.
- கணவர், மனைவி, அல்லது துணைவர் மட்டுமல்லாமல், உடன் பிறந்தவர்கள், குழந்தைகள் போன்றவர்களுடனான உறவும் மிகவும் ஆரோக்கியமாக இருக்கும்.
- நீங்கள் இனிமையாக நேரம் செல விட்டு மகிழ்வீர்கள்.
- அலுவலகத்திலும் மற்றவர்களுடன் உறவு நன்றாக இருக்கும்.
- முழு ஆதரவும் கிடைக்கும்.
- தெரிந்தவர்கள், அண்டைஅயலார், நண்பர்கள் போன்றவர்களும் ஆதரவாகப் பழகுவார்கள்.
- எங்கு இருந்தாலும் சரி, எவருடன் இருந்தாலும் சரி, இப்பொழுது இனிமையான உறவை அனுபவிப்பீர்கள்.
- இதில் சிறந்த விஷயம், தேவைப்படும் பொழுது, மற்றவர்களின்ஆதரவும், உதவியும் உடனடியாகக் கிடைக்கும்.
- இந்தக் கால கட்டத்தில், தைரியம், தன்னம்பிக்கை, மற்றவர்கள் தொடர்பு, நேரத்தை சரியாகப் பராமரிப்பது, நிர்வாகத்திறன், படைப்பாற்றல், புதுமையைப் புகுத்துதல், ஆராய்ச்சில் ஆர்வம் போன்ற நற்பண்புகள், நன்கு வெளிப்படும். இவற்றை அடிப்படையாகக் கொண்டுதான், முன்னேற்றமும் அமையும்.
- நேர்மறையான பலமாற்றங்கள் ஏற்படலாம்.

"ஓம் விருஷபத் வஜாய வித்மஹே
க்ருணி ஹஸ்தாய தீமஹி
தந்நோ குருஹ் ப்ரசோதயாத்"

~ ஜோதிடர் ஜெயம் ஜனார்தனன்